**இந்து காலாசார நிதியம் - 2013**

இந்து கலாசார நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 (4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்து கலாசார நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இல. 01 இன் பின்வரும் வேண்டுகைகள் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக நிதியத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) ஐந்தொகை மற்றும் வருமானச் செலவினக்கூற்று நியமத்தில் வழங்கப்பட்ட வடிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க மானியங்கள், நிதியத்திற்கான நன்கொடைகள், முதலீடுகள் மற்றும் நிதி உதவிகள் என்பவற்றின் கணக்கீட்டியதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

2006 திசெம்பர் 26 ஆந் திகதிய பிஎவ் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம், முதலீடுகள் தொடர்பான கணக்கீட்டுப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 04.1 (அ) இற்கு முரணாக, அனுதிக்கப்பட்ட பாதீடு இன்றி நிதியத்தின் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,623,544 ஆன நேரொத்த மிகைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 1,969,021 ஆன மிகையாக இருந்தது. நிதி விளைவுகளில் ரூபா 345,477 ஆன அதிகரிப்பிற்கான காரணங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | | 2013 | 2012 | மீளாய்வாண்டிற்கான நிதிக் விளைவுகளிற்கான தாக்கம் |
|---|---|---|---|---|
| | | --------- | --------- | ------------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம்: | அரசாங்க மானியம் மற்றும் ஏனைய நன்கொடைகள் | 1,000,000 | 1,600,000 | (600,000) |
| | வட்டி வருமானம் | 2,178,751 | 1,739,372 | 439,379 |
| செலவினம் : | அறநெறிப் பாடசாலைக்கு சீருடைகள் கொள்வனவு செய்தல் | 1,000,000 | 950,000 | (50,000) |
| | நிதி உதவி மற்றும் ஏனைய செலவினம் | 209,730 | 765,828 | 556,098 |
| | | | | ------------------- |
| | நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பு | | | **345,477** |
| | | | | ------------------- |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், இந்துக் கோயில்கள் மற்றும் நிறுவனங்களிற்கான நிதி உதவி, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கான சீருடைக் கொள்வனவு மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கான நிதி உதவி வழங்கல் போன்ற 03 நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கு ரூபா 1.7 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. பௌதீக மற்றும் நிதி இலக்குகள் நிர்ணயிக்கப்படாமை காரணமாக மதிப்பிட அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது இந்துக் கோயில்களிற்கு நிதி உதவி வழங்குவதற்கு ரூபா 600,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 100,000 தொகை அதாவது மொத்த ஒதுக்கீட்டின் 17 சதவீதம் மாத்திரம் 02 இந்துக் கோயில்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்துக் கோயில்களிற்கு நிதி உதவி வழங்குவதல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 80 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

#### 4.1.1 ஒட்டு மொத்த செயலாற்றல்

இந்து கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டில் தேவையான நிதிகளை சேகரிப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த சட்ட ஏற்பாடுகள் இந்து சமய மற்றும் கலாசாரத்தின் அபிவிருத்திகள் மற்றும் மேம்பாட்டிற்கு

வேண்டப்பட்ட இந்துக் கோயில்களின் அபிவிருத்திக்காக தேவையான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கு பயன்படுத்த முடியும். எனினும், நிதியத்தின் பரிபாலன சபை இது தொடர்பில் முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் 2013 ஆம் ஆண்டிற்கான மொத்த பெறுகைகளின் 66 சதவீதம் நிதியத்தின் பாவனையற்ற நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் பெறப்பட்ட நலன்களை கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, ஓர் இந்துக் கோயிலால் அதன் நிதிகளிலிருந்து. அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 600,000 தொகையைச் செலவிடுவதற்கு அங்கு குறித்த நடைமுறைகள் எதுவும் இன்மையால் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.2. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக சீருடைக் கொள்வனவு

மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 தொகையும் முன்னைய ஆண்டின் போது ரூபா 950,000 தொகையும் செலவிட்டு 02 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிப்படைத் தன்மையான வழியில் கொள்வனவு செய்வதற்கு முறையான நடைமுறை பின்பற்றாமல் வரையறுக்கப்பட்ட கேள்வி அதாவது மூன்று கேள்விகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 3.4.1 ஆம் பிரிவினை மீறி மதிப்பாய்வு செய்வதற்கு பெறப்பட்டிருந்தது.

(ஆ) தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு (ரீஈசீ) கேள்விகளை மதிப்பாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு விடய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உரிய கொள்வனவு நோக்கங்களை அடைவதற்கு தேவைப்பட்ட குறிப்புரைகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 5.6.1 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 237(ஆ) இன் பிரகாரம், புடவைகள் கொள்வனவு செய்வதற்கு பொருட்கள் பெறப்பட்ட சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 1,000,000 கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் இருப்புப் பதிவேடுகள் நிதிப்பிரமாணம் 454 மற்றும் 751 இன் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 27 இல் கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம், 1,152 சேலைகள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 1985 இன் 31 ஆம் இலக்க இந்து காலசார அதிகாரச்சட்டத்தின் 8(இ) ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் அங்கீகாரம் இந்த கொள்வனவிற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சேலைகள் பங்கிடப்பட்ட ஆசிரியர்களின் பெயர் பட்டியல் மற்றும் அவர்களுடைய கையொப்பங்கள் அல்லது புடவையகளின் பங்கீடு தொடர்பான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கை திட்டமும்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தின் நோக்கங்களின் படி செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் திட்டத்தின் பௌதீக இலக்குகளும் செயலாற்றலை மதிப்பாய்வு செய்யும் நோக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்டத்தின் பிரதான நடவடிக்கைகள் அமுலாக்குவது தொடர்பான நேர காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கொள்வனவு
(இ) நிதிய முகாமைத்துவம்